மாநகரில் சாலைகளைச் சீரமைக்க வேண்டும்

குறைதீர் கூட்டத்தில் மனு

குறைதீர்க்கும் முகாமில் மக்களிடம் மனுவைப் பெறுகிறார் துணை மேயர் கே.ஆர்.ராஜு.

திருநெல்வேலி, ஜூன் 9: திருநெல்வேலி நகரத்தில் சேதமான சாலைகளை விரைந்து சீரமைக்கக் கோரி மாநகராட்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் முகாமில் மனு அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்துக்கு துணை மேயர் கே.ஆர்.ராஜு தலைமை வகித்து பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றார். உதவி ஆணையர் மகாலட்சுமி, உதவி செயற்பொறியாளர் தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

5 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் ஜெகநாதன் அளித்த மனு: எனது வார்டுக்குள்பட்ட திம்மராஜபுரம், கக்கன் நகர், அண்ணா நகர், நியூ காலனி, சாந்தா பிலிம்ஸ் காலனி, வெங்கடேஸ்வரா நகர், காவலர் குடியிருப்பு, ரஹ்மத் நகர், விஜயாபுரி நகர், ஸ்ரீதேவி நகர் ஆகிய பகுதிகளில் ஓடை மண் அள்வதற்கு ஒரே ஒரு தூய்மை பணியாளர் மட்டுமே உள்ளார். அனைத்து பகுதிகளிலும் அவரால் ஓடை மண் அள்ள முடியவில்லை. மொத்தம் 200 தெருக்கள் உள்ளன. எங்களுக்கு ஒரு ஆண், 5 பெண் தூய்மை பணியாளர்கள் மட்டுமே தந்துள்ளனர். இதனால் கழிவுநீர் தெருக்களில் ஓடுகிறது. இது தொடர்பாக மாநகராட்சியில் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. எங்கள் வார்டு மக்கள் சார்பில் இம் மாதம் 15 ஆம் தேதி ஆட்சியர் அலுவலகம் முன்பு திரண்டு குடும்ப அட்டைகளை ஒப்படைக்கும் போராட்டம் நடத்த உள்ளோம். ஆகவே, எங்கள் பகுதிக்கு கூடுதலாக தூய்மை பணியாளர்களை நியமிக்கவும், சாலைகளை விரைந்து சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

மாநகராட்சி பணியாளர்கள் அளித்த மனு: மாநகராட்சி பிரதான வாயில் அருகே புதுப்பிக்கப்பட்ட சிறிய கட்டடத்தில் பொதுமக்களின் வசதிக்கேற்ப ஏற்கெனவே பிறப்பு, இறப்பு சான்றிதழ் மற்றும் வரி வசூல் மையம் இயங்கி வந்தது. தற்போது அந்தக் கட்டடத்தில் ஒரு நபர் பணிபுரியும் ஆதார் மையம் மட்டும் செயல்படுகிறது. எனவே, ஆதார் மையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்துவிட்டு, அங்கு மக்கள் பயன்பெறும் வகையில் பிறப்பு, இறப்பு, வரி வசூல் மையம் மீண்டும் இயங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தச்சநல்லூர் 13 ஆவது வார்டு மக்கள் அளித்த மனு: மேலக்கரை பகுதியில் சிமெண்ட் சாலை வசதியும், பாதாளச் சாக்கடை இணைப்பும் ஏற்படுத்தி தர வேண்டும் எனவும், திருநெல்வேலி நகரம் 16 ஆவது வார்டு தமிழக வெற்றிக் கழக வட்டச் செயலர் மாரி செல்வம் தலைமையில் அப்பகுதி மக்கள் அளித்த மனுவில், திருநெல்வேலி நகரம் பெரியசாமி கோயில் தெருவில் உள்ள சாலை கடந்த பல மாதங்களாக மிகவும் சேதம் அடைந்துள்ளது. மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி சேறும் சகதியுமாக மாறி வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்தோடு பயணிக்க வேண்டியுள்ளது. பள்ளி-கல்லூரி மாணவர்கள் மற்றும் நோயாளிகள் அவதிப்படுகின்றனர். ஆம்புலன்ஸ், பொதுப் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே இச்சாலையை உடனடியாக சீரமைக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

நெல்லையில் பாரதிதாசன் பண்பாட்டுக் கழகம் தொடக்கம்

விழாவில் பாரதிதாசன் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய தமிழறிஞர்கள்.

திருநெல்வேலி, ஜூன் 9: திருநெல்வேலியில் பாரதிதாசன் பண்பாட்டுக் கழகம் தொடக்க விழா ஐஸ்வர்யா கல்வி நிறுவன கூட்டரங்கில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் கவிஞர் பாப்பாக்குடி இரா.செல்வமணி தலைமை வகித்தார். கவிஞர் கோ.கணபதி சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். கவிஞர்.சு.முத்துசாமி வரவேற்றார். பாவேந்தர் பாரதிதாசன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் பாடல் பாடப்பட்டது.

'உயர் தமிழே உயிர்' எனும் தலைப்பில் புலவர் இராம. வேங்கடாசலம், சிறப்பு சொற்பொழிவு வழங்கினார். பாமணி எழுதிய பெருவிழி கவிதை நூல் குறித்த ஆய்வரங்க உரைகளை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி பேராசிரியர் பிரியதர்ஷினி, கவிஞர் சக்தி வேலாயுதம், எழுத்தாளர் வள்ளி சேர்மலிங்கம், கல்லூரி மாணவர்கள் ராஜவேல், அண்ணாமலை ஆகியோர் வழங்கினர்.

நூலாசிரியர் ஏற்புரை வழங்கினார். தொடர்ந்து பொருநை இலக்கிய வட்டப் புரவலர் தளவாய் நாதன், கவிஞர் புத்தனேரி கோ.செல்லப்பா, பேராசிரியர் ஹரிஹரன், கவிஞர் காந்திமதி வேலன், கவிஞர் மூர்த்தி, உக்கிரன் கோட்டை மணி ஆகியோர் மதிப்புரை வழங்கினர்.

மருத்துவக் கல்லூரி மாணிக்கவாசகம், முரசொலி முருகன், கவிஞர் தச்சை மணி, வழக்குரைஞர் மணி மாலா, சித்த மருத்துவக் கல்லூரி இருளப்பன், கோபாலகிருஷ்ணன், எழுத்தாளர் காயல் அருள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூலகர் அகிலன் முத்துக்குமார் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை கவிஞர் செ.ச.பிரபு தொகுத்து வழங்கினார்.

இதில், எழுத்தாளர் தளவாய் மாடசாமி, அம்பிகா, மேகலிங்கம், கோபாலகிருஷ்ணன், நல்நூலகர் முத்துகிருஷ்ணன், கண்ணன் புலமி உள்ளிட்ட தமிழ் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பாரதிதாசன் பண்பாட்டுக் கழக மாதாந்திர கூட்டத்தில் தென் மாவட்ட எழுத்தாளர்களின் புதிய நூல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட விருப்பதால் விருப்பமுள்ளவர்கள் அமைப்பின் தலைவரை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நெல்லை அருகே இளம்பெண் வெட்டிக் கொலை: சகோதரர் கைது

திருநெல்வேலி, ஜூன் 9: திருநெல்வேலி அருகே சுத்தமல்லியில் திங்கள்கிழமை இரவு இளம் பெண் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக அவரது தம்பியை போலீஸார் கைது செய்தனர்.

சுத்தமல்லி, மேலகரம் பகுதியைச் சேர்ந்த தம்பதி ஆறுமுகம்-கண்ணகி. இவர்களது மகள் ராமலட்சுமி (23), மகன்கள் ராகுல் (22), முத்துக்கிருஷ்ணன் (20).

ராமலட்சுமி, கங்கைகொண்டான் சிப்காட் பகுதியில் உள்ள சூரிய மின்சக்தி நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். மகன்கள் இருவரும் வெளியூர்களில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். ராமலட்சுமி தனது நண்பர்களிடம் அடிக்கடி கைப்பேசியில் பேசி வந்தாராம். இதைக் குடும்பத்தினர் கண்டித்தனர்.

இந்நிலையில், சுத்தமல்லி பகுதியில் நடைபெறும் கோயில் திருவிழாவுக்காக சில நாள்களுக்கு முன்பு முத்துக்கிருஷ்ணன் வந்திருந்தார். திங்கள்கிழமை இரவு ராமலட்சுமி கைப்பேசியில் பேசிக் கொண்டிருந்தாராம். இதுதொடர்பாக ஏற்பட்ட தகராறில் அவரை முத்துக்கிருஷ்ணன் அரிவாளால் வெட்டினாராம்.

இதில், பலத்த காயமடைந்த ராமலட்சுமியை உறவினர்கள் மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். ஆனால், அவர் வழியிலேயே உயிரிழந்தார். இதுகுறித்து சுத்தமல்லி போலீஸார் வழக்குப் பதிந்து முத்துக்கிருஷ்ணனை கைது செய்தனர்.

சமூக நீதி விடுதியில் பள்ளி, கல்லூரி மாணவர் சேர்க்கை

திருநெல்வேலி, ஜூன் 9: சமூக நீதி விடுதியில் சேருவதற்கு பள்ளி, கல்லூரி மாணவியர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்நாடு அரசால் திருநெல்வேலி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவிகளுக்கென சமூக நீதி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

தற்போது பாளைங்கோட்டையில் உள்ள சிறுபான்மையினர் நல சமூக நீதி விடுதிகளில் (பள்ளி/கல்லூரி மாணவிகளுக்கானது) மாணவியர் சேர்க்கை நடைபெறுகிறது. கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஐடிஐ, பாலிடெக்னிக் படிப்புகளில் பயிலும் மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள்.

இந்த விடுதிகளில் மாணவியர்களுக்கு மூன்று வேளை உணவு மற்றும் தங்கும் வசதி அளிக்கப்படும்.

இந்த விடுதியில் சேருவதற்கு மாணவியரின் பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ 2,00,000- க்கு மிகாமல் இருக்க வேண்டும். தகுதியுடைய மாணவியர் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்லூரி விடுதிகளை பொருத்தவரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளினியிடம் அல்லது மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஜூலை 15-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். மாணவியர்கள் விண்ணப்பிக்கும்போது ஜாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் ஏதும் அளிக்க தேவையில்லை. விடுதியில் சேரும் போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே கல்லூரி மாணவியர் அரசின் இச்சலுகைகளை பெற்று பயனடையலாம்.

கவின் கொலை வழக்கு: ஜூன் 23-க்கு ஒத்திவைப்பு

திருநெல்வேலி, ஜூன் 9: தூத்துக்குடி மென்பொறியாளர் கவின் கொலை வழக்கு விசாரணை இம்மாதம் 23 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகமங்கலத்தைச் சேர்ந்தவர் கவின். மென்பொறியாளரான இவர், கடந்த 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாளையங்கோட்டை கே.டி.சி. நகரில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் கே.டி.சி. நகரைச் சேர்ந்த சுர்ஜித், அவரது பெற்றோரும், காவல் உதவி ஆய்வாளர்களுமான சரவணன், கிருஷ்ணகுமாரி, உறவினர் ஜெயபால் ஆகியோரை சி.பி.சி.ஐ.டி. போலீஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் 4 பேரும் விசாரணைக்காக திருநெல்வேலி மாவட்ட 2 ஆவது அமர்வு (வன்கொடுமை தடுப்பு சட்ட சிறப்பு நீதிமன்றம்) நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி ஹேமா, இவ்வழக்கில் சி.பி.சி.ஐ.டி. போலீஸார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 632 பக்க குற்றப்பத்திரிகை நகலை 4 பேருக்கும் தனித்தனியாக வழங்க உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 23-க்கு ஒத்திவைத்தார்.

போக்ஸோ, குண்டர் சட்டத்தில் 3 இளைஞர்கள் கைது

திருநெல்வேலி, ஜூன் 9: பாளையங்கோட்டையில் போக்ஸோ வழக்கு மற்றும் குண்டர் சட்டத்தில் 3 இளைஞர்கள் செய்யப்பட்டனர்.

பாளையங்கோட்டை சீவலப்பேரி அருகே உள்ள குப்பக்குறிச்சி பகுதியைச் சேர்ந்தவர் ஜேசுபாலன்(26). இவர், பாளையங்கோட்டையைச் சேர்ந்த 16 வயது பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்தாராம். இது குறித்து சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில், பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார், போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து ஜேசுபாலனை திங்கள்கிழமை கைது செய்தனர்.

குண்டர் சட்டத்தில் இருவர்: திருநெல்வேலி, பேட்டை, திருப்பணிகரிசல்குளத்தைச் சேர்ந்த செல்லத்துரை மகன் இசக்கிதுரை(35). இவர், அதே பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக மாநகர போலீஸாரால் கைது செய்யப்பட்டார். அதே போல திருநெல்வேலி நகரம், வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த முத்துக்குமார் மகன் சுந்தர்(31) என்பவர் சிறுமிக்கு பாலியல் கொடுத்ததாக கைது செய்யப்பட்டார்.

மகளிர் காவல் ஆய்வாளர் பரிந்துரையின் பேரில், திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி, மாநகர காவல் ஆணையர் (கூடுதல் முழுப்பொறுப்பு) இரா.திருநாவுக்கரசு உத்தரவுப்படி, இருவரும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் செவ்வாய்க்கிழமை அடைக்கப்பட்டனர்.

இன்றைய நிகழ்ச்சி

திருநெல்வேலி

காவல்துறை: பொதுமக்கள் குறைதீர் முகாம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாநகர காவல் ஆணையர் அலுவலகங்கள், பாளையங்கோட்டை, காலை 10.30 மணி.

மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் - II
சென்னை முன்னிலையில்
5வது தளம், அடிஷனல் ஆபீஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.
O.A. No.599 of 2025
M/s. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, அதன் சார்பாக முதன்மை மேலாளர், சென்னை - காலேஜ் ரோடு கிளை, DPI கேம்பஸ், காலேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006 ...விண்ணப்பதாரர்
-எதிர்
Mr. S. நவநீதகிருஷ்ணன், (PAN: AIEPN9109P), S/o.Mr.சுப்பையா, எண்.3/5 செல்வன் தெரு, நாங்குநேரி, திருநெல்வேலி - 627108.
மேலும் முகவரி: எண்.18, 2B, 2வது தளம், ஜாவா நகர், பெரும்பாக்கம், சென்னை-600100
மேலும் முகவரி: எண்.161, 18வது மெயின் ரோடு, கம்பர் காலனி, அண்ணா நகர், சென்னை – 600040.
மேலும் முகவரி: உரிமையாளர் M/s.மெட்டோகேர் எக்ஸ்போர்ட்ஸ், எண்.324, பிளாக் 03, MKN ரோடு, ஆலந்தூர், சென்னை – 600016. ...பிரதிவாதி
பிரதிவாதிக்கு பத்திரிக்கை அறிவிப்பு
விண்ணப்பதாரர் வங்கியானது பிரதிவாதியிடமிருந்து ₹92,14,738.76 தொகையினை வசூலிப்பதற்காக ஒரிஜினல் விண்ணப்பம் OA எண்.599/2025 கொண்ட OA வழக்கினை தாக்கல் செய்துள்ளது. பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது திரும்பி வந்துவிட்டன. எனவே இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் கற்றறிந்த பதிவாளர், விண்ணப்பத்தாரர் வங்கிக்கு, 01.07.2026 அன்று ஆஜராகுமாறு மாற்றுச் சேவை மூலம் பத்திரிக்கை வாயிலாக அறிவிப்பினை வெளியிடுமாறு உத்தரவிட்டுள்ளார். எனவே மேற்கண்ட தீர்ப்பாயத்தில் பிரதிவாதிகள் 01.07.2026 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது. தவறினால் மேற்குறிப்பிட்டுள்ள வழக்கானது நீங்கள் இல்லாமலே விசாரிக்கப்பட்டு தகுதி அடிப்படையில் முடிவு செய்யப்படும்.
M/s P.V.முரளிதர், P.M.சுரேந்தர்
Mobile No.98401 65259
விண்ணப்பதாரரின் வழக்கறிஞர்கள்

VEHICLE FOR SALE

REG NO.	VEHICLE DETAILS	MODEL
TN18AP-2516	TATA ZEST	2017

CONTACT NO. 7639537270

VEHICLE FOR SALE

REG NO.	VEHICLE DETAILS	MODEL
TN75AZ-0816	OMEGA SEIKI STREAM LI EV-P	2023

CONTACT NO. 8248079803,8098542909

VEHICLE FOR SALE

REG NO.	VEHICLE DETAILS	MODEL
TN74AQ-8779	JAZZ V MT PETROL 5 SEATER	2017

CONTACT NO. 9842483537,9790540087

VEHICLE FOR SALE

REG NO.	VEHICLE DETAILS	MODEL
TN75BA-4152	BHARAT BENZ 1217C BS6 FBT-T	2024

CONTACT NO. 7904290161

PUBLIC NOTICE
I, S.Ravi S/o.Shanmugam residing at No: 199 O Solaipuram South Street, Ambai Kallidai Main Road, Ambasamudram, Tirunelveli District, Tamilnadu-627401, Native District Tirunelveli having Indian Passport No:F5213276. My name mentioned in my Aadhar Card (7025 1914 8103) and PAN Card (AXJPR2110C) as S RAVI and My Name mentioned as REVI SHANMUKHAN in my Passport. Both the Names S RAVI and REVI SHANMUKHAN also My name both the name denote one and same person. This Affidavit sworn in before the notary public.
S.Ravi

மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் - II
சென்னை முன்னிலையில்
5வது தளம், அடிஷனல் ஆபீஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.
O.A. No.600 of 2025
M/s. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, அதன் சார்பாக முதன்மை மேலாளர், சென்னை - காலேஜ் ரோடு கிளை, DPI கேம்பஸ், காலேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006 ...விண்ணப்பதாரர்
-எதிர்
Mr. M. வானமாமலை (Vanamamalai) (PAN:AJVPV9005G), S/o.Mr.முத்குராமலிங்கம், எண்.16B, 2வது தளம், கணபதி நகர், காட்டுப்பாக்கம், சென்னை – 600056.
மேலும் முகவரி: எண்.1/1, சக்கரபாணி காலனி, பாரிமுனை, சென்னை – 600016.
மேலும் முகவரி: உரிமையாளர் M/s. எக்லிப்சீஸ், எண்.715A, 7வது தளம், ஸ்பென்சர் பிளாசா, அண்ணா சாலை, சென்னை – 600002.
மேலும் முகவரி: எண்.3/3, காசிம் நகர், V.M.சத்திரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002. ... பிரதிவாதி
பிரதிவாதிக்கு பத்திரிக்கை அறிவிப்பு
விண்ணப்பதாரர் வங்கியானது பிரதிவாதியிடமிருந்து ₹91,71,134.46 தொகையினை வசூலிப்பதற்காக ஒரிஜினல் விண்ணப்பம் OA எண்.600/2025 கொண்ட OA வழக்கினை தாக்கல் செய்துள்ளது. பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது திரும்பி வந்துவிட்டன. எனவே இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் கற்றறிந்த பதிவாளர், விண்ணப்பத்தாரர் வங்கிக்கு, 02.07.2026 அன்று ஆஜராகுமாறு மாற்றுச் சேவை மூலம் பத்திரிக்கை வாயிலாக அறிவிப்பினை வெளியிடுமாறு உத்தரவிட்டுள்ளார். எனவே மேற்கண்ட தீர்ப்பாயத்தில் பிரதிவாதிகள் 02.07.2026 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது. தவறினால் மேற்குறிப்பிட்டுள்ள வழக்கானது நீங்கள் இல்லாமலே விசாரிக்கப்பட்டு தகுதி அடிப்படையில் முடிவு செய்யப்படும்.
M/s P.V.முரளிதர், P.M.சுரேந்தர்
Mobile No.98401 65259
விண்ணப்பதாரரின் வழக்கறிஞர்கள்

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008, போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com
அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு
"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.
இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தார்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் வைதிதத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தார்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி:
1. திரு. G.பாக்கியராஜ் ஜோசப் (கடன்தாரர்) த/பெ. ஞானராஜ் & 2.திருமதி. K.ரத்ன குமாரி (இணை கடன்தாரர்), க/பெ. திரு. G.பாக்கியராஜ் ஜோசப், இருவரின் முகவரி : எண்.1/54 சூமாபுரம், VTC நல்லாத்தி அஞ்சல், சாயர்புரம், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி, தமிழ்நாடு - 628251.
மொத்த நிலுவை தொகை: 07.06.2026 அன்று வரை ரூ. 97,26,480.08 (ரூபாய் தொண்ணூற்று ஏழு லட்சத்து இருபத்து ஆறாயிரத்து நாநூற்று எண்பது மற்றும் பைசா எட்டு மட்டும்) மேலும் 07.06.2026 முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.
தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் : சுவாதீன நிலை : ஆக்கப்பூர்வ சுவாதீனம் : அட்டவணை A: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை இணை 1 துணைப் பதிவு மாவட்டத்திற்குட்பட்ட சென்னை மாவட்டம், மாம்பலம் தாலுக்கா, தற்போது சைதாப்பேட்டை டவுன் என அறியப்படும் சென்னை மாவட்டம், மாம்பலம் - கிண்டி தாலுக்கா முனிசிபல் சைதாப்பேட்டை கிராமம் என அறியப்படும் கதவு எண்.5,7 மற்றும் 9, பழைய கதவு எண்.3/1, 3/2 மற்றும் 3/3 (4), வாணியர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600015 என்ற முகவரியில் பிளாக் எண்.6, பழைய சர்வே எண்.2B/1A1, டவுன் சர்வே எண்.105, 105/1 மற்றும் 105/2-ன் படி 1800 சதுர அடி பரப்பளவு நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: வாணியர் தெரு, தெற்கில்: திவான் பாஷா சந்து, கிழக்கில்: திரு.வேலகுமரன் செட்டியார் அவர்களின் டவுன் சர்வே எண்.106, மேற்கில்: திருமதி.R. நிர்மலா மற்றும் பிறர்களது டவுன் சர்வே எண்.104. அளவுகள்: வடக்கு தெற்காக கிழக்குப் பகுதியில் 90 அடி, வடக்கு தெற்காக மேற்குப் பகுதியில் 90 அடி, கிழக்கு மேற்காக வடக்குப் பகுதியில் 20 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பகுதியில் 20 அடி, மொத்தம் 1800 சதுர அடி. அட்டவணை B: வகை எண். 1 - F1 - மொத்தமுள்ள 1800 சதுர அடி நிலத்தில் 311 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். வகை எண். 2 - F2 - மொத்தமுள்ள 1800 சதுர அடி நிலத்தில் 202 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். அட்டவணை A -ல் குறிப்பிட்டுள்ள மொத்த சொத்து 513 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். 1வது தளத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் F1 : விற்பனைப் பகுதி 750 சதுர அடி, 1வது தளத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் F2 : விற்பனைப் பகுதி 491 சதுர அடி. "லட்சுமி நிவாசம்" என அறியப்படும் குடியிருப்பு வளாகத்தில் மொத்த கட்டிடப்பரப்பளவு 1241 சதுர அடி அல்லது அங்குள்ளபடி, அதனுடன் ஒரு கார் பார்க்கிங் உட்பட.
குறைந்த பட்ச விலை : ரூ. 86,80,000/- முன் வைப்பு தொகை: ரூ.8,68,000/- ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/-
இந்த சொத்து வங்கியின் அசல் சுவாதீனத்தில் இல்லை மற்றும் ஏல கொள்முதல்தாரர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.
a. சொத்து அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏல கொள்முதல்தாரர் தனது சொந்த முயற்சியிலேயே மற்றும் பொறுப்பில் அடையாளப்பூர்வ சுவாதீன சொத்தை கொள்முதல் செய்ய வேண்டும்.
b. வங்கியானது சொத்தினை அடையாளப்பூர்வ சுவாதீனமாக மட்டுமே ஒப்படைக்கும் மற்றும் ஏல கொள்முதல்தாரர் வங்கியிடமிருந்து அசல் சுவாதீனத்தை கோரமுடியாது.
c. அசல் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது.
d. ஏல கொள்முதல்தாரர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உரிமை கோருவதற்கு உரிமை இல்லை.
e. வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் மின்-ஏலத்திற்கு பிறகு மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (A முதல் D வரை) உறுதிமொழி உறுதிபடுத்தி உடன்படிக்கையை உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
விற்பனைக்குப் பிறகு, வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் பிரகடனம் மற்றும் ஒப்பந்தத்தை சமர்ப்பிக்கத் தவறினால் ஏல முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்	29.06.2026 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	22.06.2026 அன்று பிற்பகல் 1.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் போர்ட்டல் https://baanknet.com மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 044-28885428 - கைபேசி எண். 8940056367-ல் தொடர்பு கொள்ளவும்.
விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்
தேதி : 08.06.2026
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

Shanthi Gears சாந்தி கியர்ஸ் லிமிடெட்
CIN: L29130TZ1972PLC000649
பதிவு அலுவலகம் 304-ஏ, திருச்சி சாலை, சிங்காநல்லூர், கோயம்புத்தூர்-641 005.
தொலைபேசி எண்: 0422-4545745, மின்னஞ்சல்: waltervasanthpj@shanthigears.murugappa.com
Website: www.shanthigears.com
காகித வடிவிலான பங்கு பத்திரங்களின் பரிமாற்றம் மற்றும் டீமேட் செய்வதற்கான சிறப்புச் சாளரம் குறித்த அறிவிப்பு
செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (செபி), 2026 ஜனவரி 30 தேதியிட்ட தனது அறிவிப்பிற்கு